DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure)
***
IN THE COURT OF SUBORDINATED JUDGE MADURANTAKAM

Calender :
Miscellaneous : SC No.216/2025
Deposition of Witness for : PW 1

| | |
|---|---|
| Name. | திரு. மகாதேவன் |
| Father /Husband Name | |
| Village | |
| Taluk | |
| Calling | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day 10.03.2026.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மதுராந்தகம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். எதிரியைத் தெரியும். நான் மதுராந்தகம் மது விலக்கு அமல் பிரிவில் தலைமைக் காவலராக பணிபுரிந்த போது 31.03.2022 அன்று செங்கல்பட்டு மது விலக்கு அமல் பிரிவு காவல் ஆய்வாளர் (பொறுப்பு) மதுராந்தகம் மது விலக்கு காவல் ஆய்வாளர் அவர்களோடு பார்ட்டி சகிதம் மது விலக்கு வேட்டையாக அணைக்கட்டு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஜல்லிமேடு கிராமத்தில் கண்காணித்து வந்த போது, ஏற்கனவே நன்கு தெரிந்த ஜல்லிமேடு கிராமத்தை சேர்ந்த ஜல்லிமேடு முருகன் (எ) முருகன் என்பவர் எங்களைக் கண்டதும் ஓட முயற்சி செய்தவரை மடக்கி பிடித்து அவர் இருந்த

இடத்தை சோதனை செய்து பார்த்த போது சுமார் 35 லி கொள்ளளவு கொண்ட 3 வெள்ளை நிற கேன்களில் 105 லி நீர் கலந்த எரிசாராயம் இருந்தது. மூடியை திறந்து முகர்ந்து பார்த்த போது கண்ணெரிச்சல், வாய் குமட்டல் மற்றும் மூக்கிலிருந்து நீர் வடிந்ததால் இது நீர் கலந்த எரி சாராயம் என் தெரிய வந்தது.

2) தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்ட எரிசாராயத்தை வைத்திருந்த குற்றத்திற்காக காவல் ஆய்வாளரால் எதிரி முருகனை 13.30 மணிக்கு கைது செய்து, பொது ஜன சாட்சிகள் யாரும் முன் வராத காரணத்தால், நானும், என்னுடன் தலைமைக் காவலர் விஜய் ஆகியோர் முன்னிலையில் எதிரி எந்த வித அச்சுறுத்தலும், ஆசை வார்த்தையும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 13.45 முதல் 14.30 மணி வரை பதிவு செய்தும், எதிரி வைத்திருந்த எரிசாராயத்தை போலிஸ் மகசரில் 14.42 மணிக்கு கைப்பற்றியும், கைப்பற்றப்பட்ட 3 வெள்ளை நிற கேன்களிலிருந்து சுமார் 50 மிலி லிட்டர் அளவு கொண்ட 2 பாட்டில்களில் ரசாயண பகுப்பாய்விற்காக எடுத்து சீல் வைத்து லேபிள் ஒட்டியது போக மீதமுள்ள எரிசாராயத்தை எங்கள் முன்னிலையில் மகசர் தயார் செய்து, 15.00 மணிக்கு பாதுகாப்பாக கொட்டி அழிக்கப்பட்டது. எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துடன் 16.00 மணிக்கு காவல் நிலையம் வந்து மதுராந்தகம் மது விலக்கு அமல் பிரிவு காவல் நிலைய குற்ற எண் 257/2022 பிரிவுகள் 4(1)(aaa), 4(1-A) TNP Act r/w 6 and 11 of RS

rules படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. இது சம்பந்தமாக என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார். சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழித்தல் மகசர் **அ.த.சா.ஆ.1 மற்றும் 2**.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

3) நான் கூறிய கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழித்தல் மகசர் ஆகியவை சம்பவம் நடந்ததாக கூறப்படும் தேதியில் மற்றும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். அ.த.சா.ஆ.1 மற்றும் 2 ல் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.த.சா.ஆ.1 மற்றும் 2 எங்கள் காவல் நிலையத்தில் உள்ள கணினி மூலமாக பதிவிறக்கம் செய்யப்பட்டு பிரிண்ட் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். அது லேப்டாப்பில் பதியப்பட்டு, பின்னர் காவல் நிலையம் வந்து பிரிண்ட் எடுக்கப்பட்டது. எனவே அ.த.சா.ஆ.1 மற்றும் 2 ஆகியவற்றில் நாங்கள் சம்பவம் இடத்தில் கையொப்பம் செய்யாமல், காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான்.

4) அன்றாட பணி குறித்து நாங்கள் பாக்கெட் டைரி பராமரிப்போம் என்றால் சரிதான். நான் கூறுவது போல் சம்பவம் நடைபெற்று இருந்தால், அதைப் பற்றியும் அதில் குறிப்பிட்டு இருப்போம் என்றால் சரிதான். அந்த பாக்கெட் டைரியை பார்த்தால், சம்பவம் குறித்து ஊர்ஜிதம் செய்ய இயலும் என்றால்

சரிதான். மாதிரிக்காக எடுக்கப்பட்ட பாட்டில்கள் அரசால் கொடுக்கப்பட்டதா அல்லது வெளியே தனியாக வாங்கப்பட்டதா என்றால், வெளியே தனியாக வாங்கப்பட்டது. மாதிரிக்காக எடுக்கப்பட்ட பாட்டில்களில் அதற்கு முன்பு அதில் என்ன திரவம் இருந்தது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். 3 கேன்களிலிருந்தும் மாதிரிக்கு எடுக்கப்பட்டதாக ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேன். சொன்ன நேரம், சொன்ன இடத்தில் நான் கூறுவது போல் எந்த வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், சம்பவ இடத்தில் வைத்து எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், அவரிடமிருந்து எவ்வித ஒப்புதல் வாக்குமூலமுமம் பெறவில்லை என்றாலும், அவரிடமிருந்து எந்த சான்று பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**